தமிழனே; இது கேளாய்!

பேராசிரியர்

தமிழனே;
இது கேளாய்!

பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவகம்

பேராசிரியர்

1/5/93

திரு. பா. ஜான்,
(வசந்தம் கார்டன்,
மகாகவி பாரதிநகர், சென்னை)
அவர்களின் அன்பளிப்பு

வெளியீடு

தி. மு. க. இளைஞர் அணி

அன்பகம்

சென்னை-600 018.

முதற்பதிப்பு : ஏப்ரல் 1993

14110
[handwritten call number]

விலை : ரூ. 3/-

அச்சிட்டோர் :
நியு ரெட்சன் பிரிண்டர்ஸ்,
19/1, முசபர் ஜங் பகதூர் தெரு,
சென்னை-600 005. தொலைபேசி : 84 62 66

இந்நூல் . . .

1993 மார்ச் 26, 27, 28 தேதிகளில் கோவையில் நடைபெற்ற தி. மு. கழக 7-வது மாநில மாநாடு மற்றும் இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாட்டில் இரண்டாம் நாள் (27/3/93) நிகழ்ச்சியைத் தொடங்கி கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் ஆற்றிய உரையினை தமிழனே, இது கேளாய்! என்கிற தலைப்பில் தி. மு. க. இளைஞர் அணி சார்பில் இந்நூல் வடிவில் பெருமையுடன் வெளியிடுகிறோம்.

– தி. மு. க. இளைஞர் அணி

1/5/93

தி.மு.க. அறக்கட்டளை - அண்ணா அறிவாலயம்
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18

''கோவையில் நடைபெறும் கழக மாநில மாநாடு வர்ணிக்க முடியாத மக்கள் கூட்டத்தோடு, வரலாறு காணாத காட்சியாக நடைபெறுகிறது, இது ஒரு அரசியல் வரலாற்றுத் திருப்பு முனை மாநாடு'' என்று கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்துப் பெருமிதத்தோடு முழக்கமிட்டார்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 7-வது மாநில மாநாடும் இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடும் கோவையில் நடைபெறுகிறது. முதல் நாள் நடைபெற்ற பிரமாண்டமான பேரணிக்குப் பிறகு இன்று மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் தொடங்கின. கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

பேராசிரியர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஏழாவது மாநில மாநாடும், இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடும் இங்கு நடைபெறுகிறது. மறைந்த தலைவர்களுடைய படத்திறப்பு விழா இன்று காலை நடைபெற்றுள்ளது. நாளை (28-ந் தேதி) மாலை தலைவர் கலைஞர் அவர்கள் மாநாட்டுத் தலைமை ஏற்று, எழுச்சியூட்டும் தலைமை உரை ஆற்ற இருக்கிறார்கள்.

இன்று திறப்பு விழாவை இறுதியான நிகழ்ச்சியாக அமைத்துக் கொள்ளலாம் என்று கருதி, வழக்கத்துக்கு மாறாக காலையிலே பேச வேண்டிய திறப்பாளர் மாலையிலே பேச வேண்டிய நிலையில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

தி.மு. கழகம் ஒன்றால்தான் மக்களுக்குத் தேவையான மாற்றங்களைச் செய்து காட்ட முடியும் என்ற வகையில் இந்த மாநாடு தொடங்கி உள்ளது.

முடிவாகத் தலைவர் உரை, அதற்கு முன் தலைவரை முன் மொழிதல், சொற்பொழிவுகள் என்ற நிலையில் மாநாடு நடைபெற இருக்கிறது. ஆனால் தி.மு.கழகம் ஒரு மரபை வளர்த்த இயக்கமாக இருக்கிற காரணத்தால், ஒரு கட்டுப்பாடான கட்சி என்பதன் காரணமாக, கருத்துகளுக்கு முதலிடம். சிந்தனைகளுக்கு உரிய இடம், கொள்கை உணர்வுகளுக்குத் தான் முக்கியத்துவம் என்ற கருத்தின் காரணமாக, இங்கே மாநாட்டுத் திறப்புவிழா நிகழ்ச்சிக்கு முன்னதாகவே, பல் வேறு கருத்துரைகள் இந்த மாநாட்டு மேடையில் முழங்கப் பட்டு இருக்கின்றன.

நண்பர் கண்ணப்பன் அவர்கள் இனிதான வரவேற்புரையை வழங்கினார்கள். கருத்துச் செறிவோடு நம்முடைய மாநாட்டின் நோக்கத்தைக் குறிப்பிட்டு, கலைஞருடைய தலைமையிலே தமிழ்நாட்டில் எதிர்காலத்திலே மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்கெல்லாம் வழிகாட்டுவதைப் போல கண்ணப்பன் உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து பல முன்னணியினர் உரையாற்றினார்கள். இந்த உரைகளை எல்லாம் எண்ணிப் பார்ப்போமானால் 50 ஆண்டுகளுக்கு மேலாக நீதிக்கட்சி மாநாடு, சுயமரியாதை இயக்க மாநாடு, திராவிடர்க்கழக மாநாடு, திராவிட முன்னேற்றக் கழக மாநாடு ஆகிய மாநாடுகளை எல்லாம் பார்த்தவன் என்ற முறையில் சொல்கிறேன், இன்று ஒருநாள் இந்த

மாநாட்டிலே பேசியவர்கள் பேசிய கொள்கை விளக்கத்திற்கு ஈடாக அப்போதெல்லாம் நடைபெற்ற மாநாடுகளில் பேசப் பட்டதாக நான் கருதவில்லை.

அந்த அளவிற்கு எழுச்சியூட்டிய உரைகள். இறுதியில் பேசிய டாக்டர் காளிமுத்து ''தமிழ் எங்கள் உயிர்'' என்ற தலைப்பில், பேசிய அந்தப் பேச்சு, சங்கத் தமிழ் கொஞ்சி விளையாட, தமிழுக்கு என்னென்ன அழகுண்டோ அத்தனை யையும் எடுத்துக்காட்டுகிற உரையாக, எனக்குக்கூட புத்துணர்ச்சியூட்டுகின்ற தொரு உரையாக அமைந்தது.

கொஞ்சுகிற தமிழ், உருக்கமான கருத்து, எடுப்பான நடை, தொடுப்பான வாதம் அத்தனையும் கலந்து இங்கே தோழர்கள் எல்லோரும் உரையாற்றினார்கள். நாளைய தினமும் உரை யாற்ற இருக்கிறார்கள்.

நமது பேச்சாளர்களின் ஆற்றல்.

தி.மு.கழகத்திற்கு இப்படிப்பட்ட பேச்சாளர்கள், இப்படிப் பட்ட அற்புதமான விளக்கங்களைச் சொல்வதற்குக் கிடைத்தி ருக்கின்ற ஆற்றல்மிக்க பேச்சாளர்களைப் போல, இன்னொரு இயக்கத்திற்கு இந்த நாட்டிலே கிடைத்திருக்கவில்லை என் பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் அல்லது சந்திரமோகன் என்னும் அந்த நாடகத்திலே, சிவாஜி யைக் குறித்து காகப்பட்டர் வியந்து சொல்கிறபோது சொன்ன தொடர், ''எப்படிப்பட்ட தம்பிகளை எல்லாம் பெற்றிருக்கி றான் பாரடா'' என்பது, அறிஞர் அண்ணா எழுதி வைத்த வசனம் சிவாஜியைக் குறிக்கும் காகப்பட்டருடைய பேச்சாக அந்த இடத்திலே வரும். அறிஞர் அண்ணா அவர்கள் தன்னையே எண்ணி ''எப்படிப்பட்ட தம்பிகளெல்லாம் எனக்

குக் கிடைத்திருக்கிறார்கள்'' என்று உணர்ந்ததை எடுத்துக் கூறுகிற பாங்கில் அமைந்த தொரு தொடராகும் அது.

அறிஞர் அண்ணாவே அந்த நாட்களிலே குறிப்பிட்டுப் பேசுவார்கள். கலைஞரையோ, மற்ற தம்பிமார்களையோ, அவர்களிடத்திலே சில குறைகள் இருந்தாலுங்கூட, அறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய தம்பிமார்களை அரவணைத் துச் சொல்கிற அந்தச் சொல்லோட்டத்தினைக் கேட்டுக் கொண்டிருக்கிறபோது அறிஞர் அண்ணா அவர்களின் மதிப்பு உயருகிறபோது தம்பிமார்களின் மதிப்பும் உயரும். அப்படி அந்த இரண்டும் கலந்து தி.மு.கழகத்தின் மதிப்பு உயரும். அப்படிப்பட்ட தம்பிமார்கள் இன்றைய தினம் இந்த வரிசை யிலே தி.மு.கழகத்தில் இருக்கிறார்கள் என்பது, அன்றைக்கு அறிஞர் அண்ணாவுக்குப் பெருமை சேர்த்தது போன்று இன்றைக்குக் கலைஞருக்கும், அவரோடு இணைந்து நிற்கிற எனக்கும் ஒரு தனிப்பெருமை என்று நான் கருதுகிறேன்.

இவ்வளவு பெரிய மாநாடு, நான் எதிர்பாராத அளவுக்கு ஒரு பெரிய மாநாடு. ஒரு பேரதிர்ச்சிக்குப் பின்னாலே நடைபெறுகிற ஒரு மாநாடு. பந்தலிலே பாதி எரிந்து போனதற்குப் பின்னால் எரியாத மீதமுள்ள பந்தலை வைத்து, எரிந்த பகுதியை மறுபடியும் புதுப்பித்து இணைத்து, கூட்டப் பட்ட ஒரு மாநாடு எரிந்த பகுதியைத் தாண்டி பந்தல் போடப்படாத ஒரு பகுதியைத் தாண்டி, நெடுஞ்சாலையெல் லாம் கூட்டம் பெருகி வெள்ளமென வழியுமாறு, முதல் நாள் பந்தல் எரிந்த நிலையிலும் நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்றால் நான் நிச்சயமாகக் குறிப்பிட விரும்புகிறேன், கோவையிலே நடைபெறுகிற இந்த மாநாடு ஒரு திருப்பு முனை மாநாடு ஒரு பெரும் மாற்றத்துக்கு வழிகாணும் மாநாடு என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஒரு அரசியல் கட்சியினுடைய லட்சியத்தை வெற்றி பெறச் செய்வதற்கு, தமிழினத்தின் உயிர் மூச்சாக இருக்கிற தமிழைப் பாதுகாக்கிற கடமையை நிறைவேற்றுவதற்கு, ஆதிக்கவாதிக ளுடைய இந்தியைத் தடுத்து நிறுத்துவதற்கு, தமிழ்நாட்டில் எந்த மாடு வேண்டுமானாலும் மேயலாம் என்ற நிலைமை அனுமதிக்கப்பட முடியாது என்று எடுத்துக்காட்டுவதற்கு ஒரு திருப்புமுனை மாநாடாக இது அமைந்திருக்கிறது.

இங்கே திரண்டிருக்கிற மக்கள் வெள்ளத்தை என்னுடைய நண்பர்கள், அன்புக்குரிய இளவல்கள் வர்ணித்துப் பார்த்தார் கள். அவர்களுடைய வர்ணனையை மீறிய கூட்டமாக இது இருக்கிற காரணத்தால் அந்த வர்ணனையை இடையிலே நிறுத்திக் கொண்டு, வர்ணிக்க முடியாத அளவுள்ள கூட்டம் என்று அவர்கள் தெரிவித்தார்கள்.

இப்படி ஒரு மாநாடு நடைபெற்றதுண்டோ!

நான் இன்றைக்குச் சொல்கிறேன், கலைஞருடைய ஆற் றலை நாளைய தினம்தான் பார்க்கப் போகிறோம். வர்ணிக்க முடிகிறதா, ஒரு வேளை அந்தக் கவிஞராலேயே வர்ணிக்க முடியவில்லையா என்பதைப் பார்க்கப் போகிறோம். நாஞ்சி லாரும் முயற்சித்துப் பார்க்கலாம். ஏனென்றால் அவரும் கவிதை எழுதுகிறார். எனக்குத் தெரிந்த வரையில் தமிழ்நாட் டில் இப்படி ஒரு மாநாடு இவ்வளவு காலமும் நடைபெற்ற தில்லை, அப்படி ஒரு வரலாறு படைக்கும் மாநாடாக, இன்றைய தினம் நடைபெறுகிறது. இனியாவது தமிழ்நாடு வாழ வேண்டாமா? இனியாவது தமிழ்நாட்டைக் காப்பாற்று கிற ஆற்றல், இங்கே பேசிய இளைஞர் அணிச் செயலாளர் மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டதைப் போல தமிழ் மக்களிடை யிலே ஒரு எழுச்சி மிக்க நிலை ஏற்பட வேண்டாமா?

நாம் திருமணத்திலே கூடுகிறபோது, அது யார் வீட்டுத் திருமணமாக இருந்தாலும் ஒரு பெரிய மகிழ்ச்சி, ஒரு பெரிய

ஆரவாரம், ஒரு உள்ளக்கிளர்ச்சி பெறுகிறோம். திருமணம் முடிந்து வீட்டுக்குப் போனால் சோகம், தொழிலுக்குப் போனால் ஆர்வமின்மை. அதைப் போல மாநாட்டுக்கு வருகிறபோது எழுச்சி, ஆர்வம், கொந்தளிப்பு, திரும்பப் போனால் மறுபடியும் நாமெல்லாம் சோர்ந்துவிட்டவர்களாக ஆகிவிட்டால் இந்த நாட்டைக் காப்பாற்ற முடியாது.

தமிழனுடைய பெருமையை விவரித்து, தம்பி காளிமுத்து இங்கே பேசுகிறபோது வீரமிக்க சேர, சோழ, பாண்டிய மன்னர்களுடைய பெயர்ப்பட்டியலை எல்லாம் சொன்னார். நெடுஞ்செழியன் பெயர் வருகிறதா என்று பார்த்துக் கொண்டிருந்தேன். காளிமுத்து முன் எச்சரிக்கையாக குறிப்பிடாமல் விட்டு விட்டார் என்று நான் கருதுகிறேன். ஆனால் அன்றைக்கு ஒரு நெடுஞ்செழியன் தவறு செய்திருந்தாலும், நீதியைக் காப்பாற்றத் தவறியமைக்காக தன்னைத் தண்டித்துக் கொண்டவராக, மறைந்துவிட்ட மாவீரராக, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் விளங்கினார். இன்றைக்கு எப்படியோ என்னுடைய நண்பர் என்பதால் நான் அவரைக் கேவலப்படுத்தத் தயாராக இல்லை - இருந்தாலும், ஆரியப்படையை அரவணைத்துக் கொண்ட நெடுஞ்செழியனாக இன்றைய நெடுஞ்செழியன் ஆகியிருப்பது தமிழ்நாட்டு வரலாறு. ஆனால் அவ்வளவு பெருமைக்குரிய மாபெரும் மன்னர்கள், வீரர்களைப் பற்றி டாக்டர் காளிமுத்து இங்கே சொல்கிறபோது நான் எண்ணிக் கொண்டேன்; இவ்வளவு வீரர்கள் இருந்த தமிழகத்தில், ஆற்றல்மிக்க மன்னர்கள் இருந்த தமிழகத்தில் என்ன காரணத்தால் இந்த நாளில் தமிழன் தமிழனாக இல்லாமல் போய்விட்டான்? என்று.

நான் உங்களிடத்திலே சொல்வதற்கு உரிமை இருக்கிற காரணத்தால் சொல்கிறேன். நாமெல்லாம் தி.மு.கழக மாநாட்டில் கூடியிருக்கிறபோது, நம்முடைய தளபதிகள் உரையாற்றுகிறபோது அந்த எழுச்சியூட்டும் உரைகளைக் கேட்டுக்கேட்டு,

தமிழன், தமிழன் என்று எண்ணுகிறோம். திரும்பிப் போகிற போது, நம்முடைய தொழிலுக்குப் போகிறபோது, கல்லூரிக் குப் போகிறபோது, நம்முடைய அலுவலைக் கண்காணிக்கிற போது தமிழன் என்னும் நினைவை மறவாதிருக்கிறோம். அப்படிப்பட்ட நினைவோடு நாம் - நமது இயக்கத்தோழர்கள் இருந்த போதிலும், தமிழனுடைய நிலையில் இந்தக் கேவல மான வீழ்ச்சி எப்படி ஏற்பட்டது?

அந்நியன் நம்மைப் படைகொண்டு வென்றிருந்தால் கூடக் கேவலமல்ல! வெள்ளை ஏகாதிபத்தியம் இந்த நாட்டிலே முந்நூறு ஆண்டு காலம் நிலை கொண்டிருந்தாலும் கேவல மல்ல. மாலிக்காபூர் படையெடுத்தபோது நாம் தோற்றிருந்தா லும் கேவலமல்ல. நாம் இருக்கிற இடத்தில் நம்மை நாமே தோற்கடித்துக் கொள்கிற ஒரு கூட்டமாக, நம்மை நாமே இழந்து விடுகிற ஒரு கூட்டமாக, நம்மை நாமே மறந்து விடுகிற இனவுணர்வு இழந்தொரு கூட்டமாக ஆகி இருக்கி றோம். அப்படியிருப்பது - நம்முடைய தி.மு.கழகக் கூட்ட மல்ல; மாநாட்டுக் கூட்டமல்ல; பெரியாரை உணர்ந்த ஒரு கூட்டமல்ல; பேரறிஞர் அண்ணாவைப் பின்பற்றிய கூட்ட மல்ல; புரட்சிக் கவிஞரின் உணர்வை உள்ளத்திலே தாங்கிய கூட்டமல்ல; இவைகளையெல்லாம் உணரமுடியாதவர்களாக இருக்கிற கோடிக்கணக்கான மக்கள், தமிழன் என்ற உணர்வு இல்லாதவர்களாகத்தான் இன்றும் இருக்கிறார்கள்.

தமது தாய்மொழியாம் தமிழே தமது உயிர்மூச்சு; வாழ்வின் ஒளி; அறிவுவிழி என்பதும் உணராது; தமது இனம் திராவிட இனம் - உலகோர் வியக்கும் ஒப்பற்ற நாகரிகத்தை வளர்த்த இனம் என்பதும் அறியாது; ஓரினம் என்னும் உணர்வு கொள்ளாது, வருணதருமத்தால் இழிபிறவியாகக் கருதப்படுவ தையும் வெட்கமின்றி ஏற்று, நாயினும் கீழாய் - பன்றியினும் கேவலமாய்த் தமிழர்கள் உலவிய நிலையில்தான் - தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் தோன்றியது.

பகுத்தறிவுத் தந்தை பெரியாரின் இலட்சியம் நிறைவேற வேண்டும் என்பதற்காகவே அறிஞர் அண்ணா தி.மு.கழகத்தை உருவாக்கினார். அண்ணா உருவாக்கிய தி.மு.கழகத்தை வழிநடத்திச் செல்ல, கலைஞரைத்தவிர இன்னொருவர் இந்த நாட்டில் பிறக்கவில்லை. இந்த மாபெரும் இயக்கத்தை கட்டிக் காப்பாற்றும் ஆற்றல் பெற்ற ஒரே தலைவர் கலைஞர்தான்! என்பதை நாடறியும்.

தமிழர்களின் இன உணர்வு வீழ்ச்சியுற்றதற்குப் பல காரணங்கள். அந்த வீழ்ச்சியினுடைய எல்லையை இன்று நான் சொல்வதாகக் கருதவேண்டாம். 85 - 90 ஆண்டுகளுக்கு முன்னர் - தமிழ்நாட்டு மக்கள் மீது ஆசை வைத்து, தமிழ்மீது தம்முடைய உயிரையே பணயம் வைத்து, கவிதைகள் எழுதத் தொடங்கிய பாரதியார் தேசிய உணர்வு படைத்தவர். பக்தி உணர்வு படைத்தவர் ஆனாலும் அறிவை அரவணைத்துக் கொள்ள முற்பட்ட பாரதி அந்த நாளிலேயே எழுதுகிறார். எனக்கே எழுபது வயது; 85 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதுகிறார்:

''மழை பெய்கிறது, ஊர் முழுவதும் ஈரமாகிவிட்டது.

தமிழ் மக்கள் எருமைகளைப்போல் எப்பொழுதும் ஈரத்திலேயே நிற்கிறார்கள்.

ஈரத்திலேயே நடக்கிறர்ர்கள்;
ஈரத்திலேயே உட்காருகிறார்கள்.
ஈரத்திலேயே படுக்கிறார்கள்.
ஈரத்திலேயே சமையல்
ஈரத்திலேயே உணவு
உலர்ந்த தமிழன்
மருந்துக்குக்கூட அகப்படமாட்டான்''

என பாரதி சொல்கிறார் - தேசியக் கவி பாரதி பிராமணனாக பிறந்த பாரதி, காந்தியை மதித்த பாரதி சொல்கிறார்; உலர்ந்த தமிழன், உணர்ச்சியுள்ள தமிழன் மருந்துக்கூட அகப்படமாட்டான் என அழுத்திச் சொல்கிறார்.

மேலும் பாரதி குறிப்பிடுகிறார்:

''ஓயாமல் குளிர்ந்த காற்று வீசுகிறது. பனிக்காற்று வீசுகிறது. தமிழ் மக்களில் பலருக்கு ஜுரம் உண்டாகிறது. நாள்தோறும் சிலர் இறந்து போகிறார்கள். மிஞ்சியிருக்கும் மூடர் 'விதிவசம்' என்கிறார்கள். ஆமடா, 'விதிவசம்தான்'. அறிவில்லாதவர்களுக்கு இன்பம் இல்லை என்பது ஈசனுடைய விதி!''

அறியாமையாலும், மூடநம்பிக்கையாலும் உரிய வழியில் முயற்சி செய்யாது, எல்லாம் 'விதிவசம்' என்று நம்பிக்கிடப்பவர்களைத்தான் வெறுப்புடன் 'மூடர்' என்றார்.

பொய்க் கதைகளால் பார்ப்பனர்
வயிற்றுப் பிழைப்பு!

'சாஸ்திரம் இல்லாத தேசத்தில் நோய்கள் உயிரைப் பறிப்பது விதி', சாஸ்திரம் இல்லாத தேசம் என்று பாரதி சொல்லுவது விஞ்ஞான சாஸ்திரம், அறிவியல் சாஸ்திரம் என்பதைத்தான். அறிவியல் வளர்ச்சி இல்லாத தேசத்தில் நோய்கள் பெருகத்தான் செய்யும். தமிழ்நாட்டில் அறிவியல் சாஸ்திரங்கள் இல்லை. உண்மையான சாஸ்திரங்களை வளர்க்காமல், அறிவியல் சாஸ்திரங்களை வளர்க்காமல், வெளிநாடுகளில் இருந்து கலைச் செல்வங்களை எல்லாம் கொண்டு வந்து சேர்ப்பீர்'' என்று பாடினார் அல்லவா, அந்த உணர்வோடு சொல்கிறார், தமிழ் நாட்டில் சாஸ்திரங்கள் இல்லை என்று, உண்மையான சாஸ்திரங்களை வளர்க்காமல் இருப்ப

னவற்றையும் மறந்துவிட்டு - இங்கே முதலில் பேசிய நண்பர்கள் எடுத்துகாட்டியதைப் போல் - தமிழ்நாட்டில் அறிவியலின் அடிப்படை இருந்தது என்ற அந்த அடிப்படை யையும் மறந்துவிட்ட தமிழர்களைப் பார்த்து, தமிழ்நாட்டு பிராமணர் பாரதி எழுதுகிறார்;

''தமிழ்நாட்டுப் பார்ப்பனர் பொய்க் கதைகளை மூடர்களி டம் காட்டி வயிறு பிழைத்து வருகிறார்கள்''.

உண்மை அறிவியல் வளர்ச்சிக்குத் துணை நிற்காமல், அறிந்திருந்த உண்மைகளையும் கொண்டு வந்து மக்களுக்குத் தராமல், தமிழ்நாட்டிலே பிழைப்பின் காரணமாக, ''பொய்க் கதைகளைத் தமிழ்நாட்டுப் பார்ப்பனர் மூடர்களிடம் காட்டி வயிறு பிழைத்து வருகிறார்கள்'' என்றார்.

தமிழ்மொழி எவ்வளவோ கேவலமாக ஒதுக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் பாரதி சொன்னார்;

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்,
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,

நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்!

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மை, வெறும் புகழ்ச்சி யில்லை;

ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம். ஒருசொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!

அவர் சொன்ன இந்தக் கருத்துக்களை எண்ணிப் பார்த்தால் நாம் செவிடர்கள், நாம் குருடர்கள், நாம் ஊமைகள், நாம் பாமரர்கள் என்பது விளங்கும். தமிழன் தமிழனாக இல்லை என்ற வேதனையை 85 ஆண்டுகளுக்கு முன்னால் பாரதி நொந்து போய்ச் சொல்லியிருக்கிறார்.

பாரதி சுயமரியாதை இயக்கத்திலே இடம் பெற்றவனல்ல. ஆனால் ஜாதிகளை மறுத்தவன். பாரதி, பெரியாரைப் பார்த்த வன் அல்ல. ஆனால் பாரதியினுடைய உணர்ச்சியிலே பகுத்தறிவுக் கருத்துக்களை நம்மால் பார்க்க முடிகிறது.

''ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்'' என்று கொதித்தவன் அவன்.

பாரதியார் பாடிய கவிதைகளில் என்னென்ன சொன்னார் என்பதற்காகச் சொல்லவில்லை. நம்முடைய நிலையை பாரதியும் உணர்ந்திருந்தார் என்பதற்காகச் சொல்லுகிறேன்.

ஓர் இடத்தில் பாரதி சொல்கிறார், ''என்னுடைய தமிழ்நாட்டுப் பெண்களைப் பார்க்கிறபோது அப்படிப்பட்ட தமிழ்நாட்டுப் பெண்ணை விட இன்னொரு இனத்துப் பெண், இன்னொரு மொழி பேசுகிற பெண் அழகாக இருக்கிறாள் என்று யாராவது சொன்னால், என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை'' என்று.

அவனுடைய உள்ளத்தில் இருந்த தமிழ்ப்பற்று வைதீகத்தையே எதிர்த்து நின்றது. வர்ணாசிரம தர்மத்தைச் சாடி இருக்கிறார். வேதத்தைக்கூட வெறுத்திருக்கிறார்.

''உண்மை ஒன்றே வேதம் என்போம்'' என்று பாடியவன் பாரதி.

இன்னொரு படிமேலே போய்ச் சொன்னார்;

''சூத்திரனுக்கு ஒரு நீதி, தண்டச் சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி என்று, சாஸ்திரம் சொல்லிடுமாயின் சாஸ்திரம் அன்று 'சதி' என்று கண்டோம்''.

மனுஸ்மிருதி முதலாக, சாதிக்கொரு நீதி - தண்டனை என்று பேதம் வளர்த்த சாஸ்திரத்தைச் சதி என்று சொல்கிறார். இன்னொரு இடத்திலே பாரதி,

''இப்படிப்பட்ட சாஸ்திரங்களை நெருப்பிட்டுக் கொளுத்து வோம்'' என்று பாரதி கூறுகிறார். அந்த உணர்ச்சியைக்கூடத் தமிழர்களால் போற்றி வளர்க்க முடியவில்லை.

பாரதி பாடிய பாட்டுகளும், அவரது கவிதைகளும், கட்டுரைகளும் ஏட்டிலேதான் 1940, 45ஆம் ஆண்டு வரையிலே இருந்ததே தவிர, நாட்டிலே பரவவில்லை.

அவன் பாடிய தேச பக்திப் பாடல்கள்தான் நாட்டில் பரவின. அதை மிஞ்சிப் பரவினால்,

''செந்தமிழ் நாடெனும் போதினிலே, இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே, எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே, ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே'' என்ற பாடல் வரையில்தான் மக்களிடம் பரவிற்று.

பாரதி தேசியத்திற்குப் பயன்பட்ட அந்தத் தோற்றம் மட்டும்தான் பரவிற்று. பாரதி சமுதாயத்தைப் பற்றிப் பாடி னார். விதவைக்குத் திருமணம் வேண்டும் என்றார். தாழ்த்தப்

பட்டவனுக்குப் பூணூல் போட்டு, பார்ப்பனர்களுக்கு வேடிக்கை காட்டினார். அந்த பாரதி நாட்டுக்குக் காட்டப்பட வில்லை.

பாரதி இஸ்லாமியரின் டீக் கடையிலே நின்று டீ பருகு வான். யாராவது அவனைப் பார்த்து, பிராமணன் இங்கு டீ குடிக்கலாமா என்று கேட்டால் முஸ்லீமும் மனிதன்தானே, ஏன் குடித்தால் என்ன? என்று கேட்பான்.

பாரதியின் குடும்பம் வைதிகமாக இருந்தால்கூட, அவன் சொன்னான்: அல்லாவைத் தொழுகிறவர்கள், இயேசுவை வழிபடுகிறவர்கள், இராமனை வணங்குகிறவர்கள், எல்லோ ரும் மனிதத் தன்மையோடு வாழ்கிற ஒரு நிலையைத்தான், தான் எதிர்பார்ப்பதாகப் பாடினான். அந்த அளவு அன்றைக்கு முற்போக்குச் சிந்தனை கொண்டவனாக இருந்த நிலையில் தமிழன் தாழ்ந்து கிடந்ததை அவனால் உணர முடிந்தது. தமிழன் என்ற உணர்வு இல்லாமல் இருப்பதைக் கண்டுதான், உலர்ந்த தமிழன் மருந்துக்குக்கூட அகப்படமாட்டான் என் றான். ஆனால் மற்ற இனத்தை வெறுத்தவன் அல்ல.

அவன் உள்ளபடியே வடமொழியிடத்திலே பகை உணர்வு கொண்டவனல்ல.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்குங்காணோம்'' என்று பாரதி சொல்லும்போது, அவ னுக்கு சமஸ்கிருதம் தெரியும். வங்காளத்திலே இருந்தபொ ழுது இந்தி ஓரளவு படித்தான். தெலுங்கு சங்கீதம் அவனுக்குத் தெரியும். தெலுங்கிலே பாடுகிற பாடலைக் கண்டித்து அவன் கட்டுரை எழுதுகின்றான். ''தமிழனுடைய காதுகள் மரக்காதா கப் போய்விட்டது; வெறும் தோல் காதாகப் போய்விட்டது,'' என்று.

தமிழன் பொருள் தெரியாமல், சங்கீதம் கேட்பதற்கு உட்கார்ந்து கொண்டு தலையாட்டிக் கொண்டிருக்கின்றான் என்று கண்டித்தவன் பாரதி.

ஆனால் தமிழன் அதை எங்கே புரிந்துகொண்டான், எங்கே உணர்ந்தான்; தமிழனாய் அவன் இருந்திருந்தால் உணர்ந்திருப்பான். தமிழன் என்கிற சூடு சொரணை கூட இல்லாமல் அவன் இருந்திருப்பதால் உணரவில்லை.

அந்த வேளையில்தான் தந்தை பெரியாருடைய சுயமரியாதை இயக்கம் தோன்றியது. பெரியார் என்ன அவரே ஒரு நாள் இரவில் ஞானம் பெற்று, திடீரென்று பேச வந்தவரா? காங்கிரஸ் இயக்கத்திலே தேசிய இயக்கத்திலே சேர்ந்து நாட்டுக்குப் பாடுபட்டுவந்த அவருக்கு, கதர் மூட்டை சுமந்து தெருவெல்லாம் விற்ற அவருக்கு- மதுவிலக்கு இயக்கத்திலே நம்பிக்கை கொண்ட அவருக்கு - ஜாதி உணர்ச்சி உள்ளவர்கள் தன்னையே கேவலப்படுத்திடும் வகையில் நடந்து கொள்கிறார்கள் என்ற எண்ணம் வந்த போதுதான் சுயமரியாதை உணர்வு ஏற்பட்டது. ஒரு பிராமண நண்பர் வீட்டில் விருந்துக்குச் சென்றபோது திரு.வி.க.விற்கும் தனக்கும் உள்ளே உட்கார வைத்துச் சாப்பாடு போடாமல் வெளியே உட்கார வைத்துச் சாப்பாடு போட்டதைக்கூட பெரியார் ஏற்றுக் கொண்டார். ஆனால் குருகுலத்திலே அந்த நிலைமை ஏற்பட்டபோது, தமது தன்மான உணர்வைக் காட்டுவதற்காக எதிர்க்கத் தொடங்கினார். காங்கிரசாரிடையே இதுபோன்ற சாதிப்பாகுபாடு காட்டும் எண்ணம் வளர்ந்து வந்த காரணத்தாலேயே காங்கிரசைவிட்டு வெளியே வந்தார். அதற்குப் பின்னர் அவர் தொடங்கிய இயக்கந்தான் சுயமரியாதை இயக்கம். பெரியார் துவக்கிய குடியரசு இதழைத் தொடங்கி வைத்தவர் சைவ சமயப்பெரியார் திருப்பாதிரிப்புலியூர் ஞானி

யாரடிகள் ஆவார். அந்தக் குடியரசு இதழ் தொடங்கிய போதுகூட அதன் பச்சை அட்டையில் போடப்பட்டிருந்த படம், ஒரு பக்கம் மகாத்மா காந்தி; இன்னொரு பக்கம் கைராட்டை.

சுயமரியாதை உணர்வு உள்ளத்தில் பதியட்டும்!

ஆனால் சுயமரியாதை இயக்கக் கருத்தை சொல்லத் தொடங்கிய போது வந்த எதிர்ப்புக்களைப் பார்த்துப் பார்த்து, பதில் சொல்லிச் சொல்லி, சுயமரியாதை இயக்கத்தினுடைய கொள்கைகளும், இலட்சியமும் முழுவடிவம்பெற ஏறத்தாழ நான்காண்டு ஐந்தாண்டு காலம் ஆயிற்று.

அந்தச் சுயமரியாதை இயக்க உணர்வு நமது கழகத் தோழர்களின் உள்ளத்திலே ஆழமாகப் பதிந்திட வேண்டும். நண்பர் பி.டி.ஆர். பழனிவேல்ராசன் இங்கே பேசுகிறபோது சொன்னார்; அவர் தி.மு.க. தொண்டர் ஆனாலும் சமயச் சார்பு உணர்வுள்ள குடும்பத்திலே அவர் பிறந்த காரணத்தால் சொல்வதாகச் சொன்னார். ''என்னைச் சார்ந்த ஆஸ்திக மக்கள் சார்பாக நான் சொல்கிறேன். அவர்களையும் சேர்த்துக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்களுக்குத்தான் உண்டு'' என்று.

கலைஞரை பார்த்து அவர் அப்படிச் சொல்ல என்ன காரணம்? மதம் சமயம் என்று பக்தி வழியில் ஈடுபட்டவர்களாக இருந்தாலுங் கூட, சுயமரியாதை இல்லாவிட்டால் அவர்கள் மானத்தோடு வாழ்கிற நிலைமை இந்த நாட்டிலே இருக்க முடியாது. மிகச் சிறந்த சைவன் என்பதற்காக, நல்லதொரு வைணவன் என்பதற்காக ஒருவன் சூத்திரன் ஆகலாமா? மிகச் சிறந்த பக்திமான் என்பதற்காக அவன்

பஞ்சமன் ஆகலாமா? அப்படிப்பட்ட இழிவை ஏற்படுத்தலாமா?

பஞ்சமனாக, தாழ்த்தப்பட்டவனாக, சூத்திரனாக இருந்தவர்களுள் பக்தர்களாக ஆனவர்களை மதித்தார்கள் என்று காட்டுவதற்காக நந்தனாரை மதித்ததாக, திருப்பாணாழ்வாரை மதித்ததாக வரலாறு எழுதுகிறார்கள். திருப்பாணாழ்வாரை மதித்து மேல் சாதியாரின் வீட்டின் உள்ளே உட்காரவைத்து உணவு வழங்கியதாகச் சொல்கிறார்கள். சைவத்திலே, ஆவுரித்துத் தின்றுழலும் புலையர்களாயினும் சிவனை வழிபடுகிறவர்களாக இருப்பார்களேயானால் அவர்களை எல்லாம் போற்றுவோம் என்று அவர்கள் பாடிய பாடலைக் காட்டுகிறார்கள். அதிலே உள்ள சூட்சமம், உள்நோக்கம் என்ன தெரியுமா?

எவன் பக்திநெறியை முழுமையாக ஏற்றுக் கொள்கிறானோ அவனைத் தங்களுடன் சேர்த்துக் கொள்வர்கள். சூத்திரன் எவனாவது அதிகம் படித்து விட்டால் அணைத்துக்கொண்டு விடுவார்கள். மிகப் பெரிய அறிவாளியாக எவனாவது இருந்தால் அவர்களையும் அணைத்துக் கொண்டு விடுவார்கள். யாருக்காவது மிக நன்றாகப் பாடத் தெரிந்தால் அவர்களையும் அணைத்துக் கொள்வார்கள். மிகப் பெரிய செல்வாக்குப் பெற்ற எந்தத் தலைவனையும் தமது அரவணைப்புக்கு ஆளாக்கிப் பாராட்டிப் போற்றி இழுக்க முயற்சிப்பார்கள். பயன்படுகிறவரை பாராட்டுவார்கள். ஆனால் நடைமுறையில் அவர்களை வீழ்த்தி விடுவார்கள். போற்றுவதாக மேலே உயர்த்திக்காட்டி கீழே போட்டு விடுவார்கள். அது வைதிகர்களின் - வர்ணாசிரமவாதிகளின் வழிவழி வந்த பழக்கம்.

அந்த வைதிக மனப்பான்மையில் இருந்து தமிழ் நாட்டைக் காப்பாற்றிடவல்ல ஒரு பெரும் ஆற்றலை நமக்குத் தந்திருப்ப

துதான் சுயமரியாதை இயக்கம். பெரியாரை யார் யாரோ கண்டித்தார்கள். நாத்திகன் என்றார்கள். கடவுளின் எதிரி என்றார்கள்.

பெரியாரிடமே நேரில் கேட்டார்கள்; நீங்கள் கடவுளை எதிர்த்து இல்லை என்று பேசுகிறீர்களே! நாளைய தினம் கடவுள் உங்கள் எதிரே வந்த விட்டால், என்ன செய்வீர்கள்? என்று.

அதற்குப் பெரியார் சொன்னார்: ''அப்படியே கடவுளே நேராக வந்துவிட்டால், நானே சரி என்று ஒத்துக் கொண்டு போகிறேன். இதுவரை வரவில்லை. நாளைக்கு ஆண்டவனே நேராக வந்தால், ஆண்டவனே நீ இவ்வளவு நாள் வராமல் இன்றுதான் வந்தாய். எனவே நீ இருப்பது இன்றுதான் எனக்குத் தெரிந்தது. அதனால் இவ்வளவு நாளாக நீ இல்லை என்று பேசிவிட்டேன். அது தப்புன்னு மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். ஆனால் உனக்கும் புத்தி இல்லை. நீ முன்னதா கவே வந்திருக்கலாம் அல்லவா? உனக்குப் புத்தி இருந்து, முன்னதாகவே வந்திருந்தால், அன்றுமுதலே நீ இருக்கிறாய் என்று சொல்லிக் கொண்டிருந்திருப்பேன் அல்லவா? என்று கேட்பேன் என்றார் பெரியார்.

பெரியார் ஊட்டிய உணர்வே நம்மை மனிதனாக்கியது!

எதற்காகப் பெரியார் அவ்வாறு சொன்னார் என்றால், தெளிவுபடுத்துவதற்காக. மனிதனுடைய வாழ்க்கையில் சிந்த னைதான் அவனை உருவாக்கும். மிகப்பெரிய கவிஞனாக இருந்தால்கூட, அவனுக்குச் சிந்திக்கிற ஆற்றல் இல்லாவிடில் அவனது கவிதை கூடச் சிறப்புப் பெறலாம்; ஆனால் அவனது

வாழ்க்கை சிறப்புப்பெறாது. மிகப்பெரிய எழுத்தாளனாக இருப்பான். ஆனால் சிந்திக்கிற, ஆற்றல் இல்லாவிடில், அவனது வாழ்க்கையைச் செம்மைப்படுத்த முடியாது. எனவே அந்த வகையில் கல்வி அறிவாற்றல் மிக்கவர்கள் கூட எண்ணிப்பார்க்கவில்லையானாலுங்கூட, சுயமரியாதை இயக்கம், மனிதன் தன்னை உணர்ந்து தன்னுடைய இனத்துக்காக, தன்னைச் சூழ்ந்திருக்கிற தாழ்வு நிலை மாறுவதற்கான வழியை எண்ணச் செய்தது? என்னையே சுயமரியாதை இயக்கத்தான் மனிதனாகக் காப்பாற்றி இருக்கிறது என்று உணர்கிறவன் நான்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்தை பெரியாரைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது - என் வாழ்நாளில் நான் கண்டதும் கொண்டதும் ஒரே தலைவர் பெரியாரைத் தான் என்று சொன்னார். அரசியலிலே பாதை பிரிந்துபோய் விட்ட நிலைமை ஏற்பட்டிருக்கலாம். ஆனால் நான் ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரே தலைவர் தந்தை பெரியார்தான் என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதற்குக் காரணமே, பெரியார் ஊட்டிய உணர்வு நம்மை மனிதனாக்கியது. நம்மைத் தமிழன் என்று நம்பிக்கையோடு எண்ணச்செய்தது, நம்மை மற்றவர்களுக்காகப் பாடுபடுவதற்கான தகுதி நமக்கு இருப்பதாக உணரச்செய்தது. நாமெல்லோரும் ஒரு இனம், ஒரு குடும்பம் என்று எண்ணுவதற்கான அடிப்படையை வகுத்துத் தந்தது.

இவ்வளவு பெரிய கூட்டத்தை
வேறெங்கு காணமுடியும்?

இந்த மாநாட்டில் எத்தனை இலட்சம் பேர் திரண்டிருக்கிறீர்கள்; எவ்வளவு நெருக்கமாக, நீங்கள் அமர்ந்து இருக்கிறீர்கள் என்பதைப் பார்க்கும்போது ஒரு வியப்பு தோன்றுகிறது.

உங்களிடையே மூச்சுவிடக்கூடிய அளவிற்குக்கூட இடமின்றி இருப்பதைப்போல், நெருக்கமானதொரு கூட்டத்தை வேறு எந்த இடத்திலாவது பார்க்க முடியுமா?

நம்முடைய இனம் தமிழினம், நமக்காக இந்த மாநாடு, நம்முடைய வழியில் வரவிருக்கிற வாரிசுகளுக்காக நடக்கிற மாநாடு - தமிழ் மண்ணுக்காக இந்த மாநாடு என்கிற அந்த உணர்வுதான் நம்மையெல்லாம் இந்த நெருக்கத்திலும் புழுக்கத்திலும் பிணைத்து வைத்திருக்கிறது.

இதற்கான அடிப்படையைத் தந்தவர் தந்தை பெரியார். அந்தச் சுயமரியாதை இயக்கம் ஊட்டிய தன்மான உணர்வு நம்முடைய உள்ளத்திலே என்றைக்கும் தணலாக இருக்க வேண்டும். நாம் நாஸ்திகர் ஆகிறோமோ இல்லையோ, அது வேறு, அதற்கான தெளிவு நம்மில் பலருக்குக் கிடைக்கிறதோ இல்லையோ, அதுவும் வேறு,

கடவுள் என்று ஒன்றை ஒப்புக் கொள்வதாக இருந்தால், அதை ஒருவரும் ஒருநாமம் இல்லா இலக்கணமில் கற்பனை என்னும் ஓர் எல்லையிலே வைத்துத்தான் ஒப்புக்கொள்ள முடியும்.

''அங்கிங் கெனாதபடி யெங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்ததெது, தன்னருள் வெளிக்குளே''... என்று சொல்கிற அந்த எல்லைக்குச் சென்று, எல்லைக்கப்பாலும் போய், அப்பாலுக்கு அப்பால் அதற்கும் அப்பால் என்று சொல்லித்தான் முடித்தார்கள். எனவே அது விவரிக்க முடியாத ஒன்று. திட்டவட்டமான கருத்துக்கு ஆட்பட முடியாத ஒன்று.

இன்னும் தெளிவாகச் சொன்னால், உணரும் வழியிலேதான் கடவுளை உள்ளத்தால் உணரலாமே தவிர, தேடுகிறவன் தேடலாமே தவிர, அறிவு வழியிலே ஆதாரத்தோடு இதுவரை எவரும் உள்ளதென்று நிலைநாட்டியதில்லை. அப்படி ஒருவர் பிறக்கவும் இல்லை. அறிவு வழி ஆண்டவனை ஏற்காது. ஏற்றுக்கொண்ட உணர்வுள்ளவர்களுக்கு இந்த அறிவு பிறக்காது.

எனவே அந்த அறிவு நிலை வேறு. இந்த உணர்வு நிலை வேறு, எனவேதான் அறிஞர் அண்ணா அவர்கள் மிக எச்சரிக்கையாகச் சொன்னார்கள், ''மனிதர்களிடையே உணர்வையும் அறிவையும் மோதவிட்டுச் சோதித்துக் கொண்டிருக்க நேரமில்லை, உண்டென்றும் இல்லையென்றும், யாராவது மடாதிபதி சொல்லலாம். யாராவது வேறு எழுத்தாளர் சொல்லலாம். அதற்கெல்லாம் நமக்குக் காலமில்லை''; என்று, இந்த மாபெரும் சமூகத்தைத் தட்டியெழுப்பி, ஒருங்கு திரட்டி ஒன்றுபடுத்திக்கொண்டு போகவேண்டும்; ஒரு வாழ்வு அளிக்கவேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் எண்ணியதன் விளைவாகத்தான், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற பொது நோக்கத்தை ஏற்றுக் கொள்ளத் தடையில்லை என்றார்.

நாம் திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்வது உண்மையாக இருந்தால், நாம் ஏதோ ஒப்புக்காக ஒரு பெயருக்காக அப்படிக் கூறமுடியாது. தி.மு.க என்பது வெறும் பெயர் மட்டும் அல்ல, வெறும் பெயருக்காக தி.மு.க இந்நாட்டுக்குத் தேவையுமில்லை. இந்தக் கட்சியினுடைய பெயர் நம்மிடத்திலே ஊட்டுகிற உணர்வு, நான் திராவிடன், நான் தமிழன் என்பது. நான் திராவிடன் என்றால் முதலியார் அல்ல, செட்டியார் அல்ல, வன்னியர் அல்ல, நாயுடு அல்ல,

முக்குலத்தோர் அல்ல, கொங்கு வேளாளர் அல்ல, நான் மனிதன்; நான் தமிழன் என்பதாகும்.

ஜாதி உண்மையில்லை என்பவனே சுயமரியாதைக்காரன் !

என்னுடைய சாதி உண்மையானதல்ல என்பதை நான் உணர்ந்தபோதுதான் திராவிடன் என்கிற இனவுணர்வு ஏற்படும். என்னுடைய ஜாதி எனக்கு முக்கியமல்ல; அடுத்தவன் ஜாதி என்னவென்பது எனக்குத் தேவையுமில்லை என்று கருதுகிறபோதுதான் நான் சுயமரியாதைக்காரன்.

'எல்லோரும் ஓர் குலம். எல்லோரும் ஓர் இனம் என்ற எண்ணம் வரும்போதுதான் நாம் எல்லாரும் உயர்ந்த மனிதர். எல்லோரையும் சமமாகக் கருதுகின்ற அந்த மனப்பக்குவம் எப்போழுது வருகிறதோ, அப்போதுதான் நாம் திராவிடர். அதுபோன்ற உணர்வு வந்துவிட்டால் தீண்டாமை ஏது ? ஜாதி ஏது ? வருணா சிரமம் ஏது ? பார்ப்பனீயம் ஏது ? அதனுடைய ஆதிக்கத்துக்கான அடிப்படை எப்படி நிலைக்கும்; நீடிக்க முடியும் ?

என்றைக்கு நாம் ஜாதியை விட்டு வெளிவருகிறோமோ 'அன்றைக்குத்தான் நாம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரராக இலட்சியப் பணி ஆற்ற முடியும்.

பாரதிக்கும் - வள்ளலாருக்கும் இல்லாத சாதி நமக்கு எதற்கு ?

நம்மைக் சுற்றி ஜாதி இருக்கலாம். சப்பாத்திக் காட்டில்கூட இரண்டு பூச்செடியை வளர்க்க வேண்டிய நிலைமை ஏற்படலாம். அந்தச் செடியை வளர்க்கவேண்டுமானால். சப்பாத்

தியை வளர்க்கக் கூடாது. அதுபோல ஜாதி என்ற சப்பாத்திக் காடு மூடி இருக்கிற காரணத்தால்தான் தமிழ் இனத்தினுடைய இன உணர்வுதரும் எழுச்சி கொண்ட நடமாட்டமே முடங்கிப் போய் இருக்கிறது.

நான் அதற்காக, உடனே சங்ககாலத் தமிழனைப் போல யாரும் யாரையும் காதலிக்க வழி திறந்துவிட வேண்டும் என்று கூறவில்லை. அந்த வயதில் நான் இல்லை.

ஆனால் நான் உங்களிடத்தில் கேட்டுக் கொள்வது, யாரோ யாரையோ காதலித்தால், வெவ்வேறு சாதியினராயினும் அதைத் தாங்கிக் கொள்கிற உணர்வு நமக்கு இருக்க வேண்டாமா?

பாரதிக்கு இல்லாத ஜாதி உனக்கும், எனக்கும் எதற்கு? தன்னுடைய 55 ஆண்டு வாழ்நாளில் 40 ஆண்டுகாலத்திற்கு மேலாக ஆண்டவனையே பாடிக்கொண்டு இருந்த வடலூர் வள்ளலாருக்கு இல்லாத ஜாதி உனக்கும் எனக்கும் எதற்கு? திருவள்ளுவருக்கு இல்லாத ஜாதி உனக்கும் எனக்கும் எதற்கு? நம்மைக் கேவலப்படுத்துகிற ஜாதி நமக்கு எதற்கு? செட்டியாரோ, வன்னியரோ, முதலியாரோ, நாயகரோ இவர்கள் எல்லாம் சூத்திரர்கள் என்று கூறப்படுவதற்கு, நாமே அதற்கு ஜாதியின் பெயரால் இடம் கொடுத்துவிட்டு நம்மையே தாழ்த்திக் கொள்வதா? இன்னும் சொல்லப்போனால் இவையெல்லாம் வெறும் மாயை, அறியாமை, மூடநம்பிக்கை அதைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் ஆரியமாயை என்று குறிப்பிட்டார்கள்.

எனக்குப் பார்ப்பனர்களை வெறுக்கிற உணர்வு இருபது இருபத்தி ஐந்து வயதுவரை இருந்திருக்கக்கூடும். அதற்குப்

பிறகு நம்மவர்களைத்தான் அவர்களின் போலித்தனமான சாதி எண்ணங்களுக்காக நான் வெறுக்கிறேன்.

ஏனென்றால் ஜாதியைத் தனக்குப் பெருமையாக எண்ணி, தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டான் தமிழன்: வைதிக முறைகளையெல்லாம் தனக்கு வாய்த்த உயர்வாகக் கருதினான். வடமொழியில் அர்ச்சனை நடைபெற்றால், தன் குடும்பம் மிகச் சிறந்த வளமை பெற்றிருக்கும் என்று கருதினான். வைதிகர்கள் சொன்னதற்கெல்லாம் தலையாட்டினான். நம்பினான், ஏமாந்தான்.

இவர்களெல்லாம் விழிப்புற வேண்டும் என்றுதான் தந்தை பெரியார் பாடுபட்டார். பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை அடியோடு ஒழிக்க வேண்டும் என்பதில் அவர் தீவிரமாக இருந்தார்.

அதேபோல் திராவிட இயக்கத்தின் கொள்கை என்று எடுத்துக்கொண்டால், இந்த அடிப்படையைக் காப்பாற்றுவது தான். பெரியார் நீதிக் கட்சியின் தலைவராக ஆனபோது நீதிக்கட்சியின் எண்ணம் பிராமண ஆதிக்கத்தைத் தடுப்பது மட்டும்தான். அந்த ஆதிக்கத்தைத் தடுக்க வேண்டுமேயானால் அரசு அலுவலகங்களில் மற்றவர்களுக்குப் பங்கு வேண்டும். கல்லூரிகளில் இடம் வேண்டும். மற்ற சமூகத்தினருக்கு இருக்கிற தடைகள் நீங்க வேண்டும் தீண்டாமை கெடுபிடி ஒழிய வேண்டும் என்று தான் நீதிக்கட்சி பணியாற்றிவந்தது.

அப்படிப்பட்ட நீதிக்கட்சியை வீழ்த்த வேண்டுமென்று வைதிகர் விரும்பிய காரணத்தால்தான் டி.எம்.நாயர் போன்றவர்கள் வருணாசிரமத்தைக் கண்டித்தார்கள். ஆனால் பெரியார்

சுயமரியாதை இயக்கத்தை உருவாக்கிய பின்னர் நீதிக் கட்சிக் கும் தலைவரான பின்னர், சேலம் மாநாட்டில் நீதிக்கட்சியின் பெயர் மாற்றம் செய்தது மூலம் திராவிடர் கழகத்தைத் தோற்றுவித்தார். திராவிடர்க் கழகம் பகுத்தறிவு மட்டும் போதாது: இன உணர்வும் தேவையென்று உணர்ந்து செயற் பட்டாலும், ஒரு ஜனநாயக இயக்கமாக, ஒரு அரசியல் இயக்கமாக, பல்லாயிரக் கணக்கில் மக்கள் திரண்டு வருவதற் குப் பெரியார் அவர்கள் வழி வகுக்கவில்லை. அந்தச் சூழ்நிலையில்தான் அறிஞர் அண்ணா அவர்களை அணுகி, எங்களைப் போன்றவர்கள், அன்பில், மன்னை நாராயண சாமி, கே.கே. நீலமேகம் போன்ற தோழர்கள் எல்லாம் எப்படியும் ஒரு கட்சியை உருவாக்க வேண்டும் என்றோம். நான் அப்போது அண்ணாவிடம் சொன்ன கருத்து இது. பெரியாரின் இலட்சியம் நிறைவேற வேண்டும் என்று நீங்கள் கருதுவதை மெய்ப்பிக்க, அதற்கு ஏற்ற தொரு அமைப்பை நீங்கள் உருவாக்கித் தாருங்கள். நீங்கள் பெரியாரின் சுயமரி யாதை கொள்கையை நிலைநாட்டுவதற்காக ஒரு கட்சியை உருவாக்கித் தாருங்கள் என்று நான் சொன்னேன்.

பிறகு அண்ணா அவர்களை நூற்றுக்கு மேற்பட்ட கழக முன்னணியினர் வேண்டி இந்த இயக்கம் உருவாக்கப்பட்டது. அதுதான் திராவிட முன்னேற்றக் கழகம், இன்றைக்குக் கலைஞரால் காப்பாற்றப்பட்டு வருகிற இந்த ஜனநாயக அமைப்பு.

கலைஞரைப் போன்றதொரு தலைவரை
என்னால் பார்க்க முடியவில்லை!

கலைஞரை நான் பாராட்டுவது, வாழ்த்துவது, போற்றுவது இவைகளெல்லாம் மேடைக்காக அல்ல. இவ்வளவு பெரிய

இயக்கத்தைக் காட்டிக் காப்பாற்ற, இன்னொரு தலைவரை என்னால் இன்னும் எண்ணிப் பார்க்க முடியவில்லை. இந்த இயக்கத்தை அறிஞர் அண்ணா எதற்காக உண்டாக்கினாரோ அதை நடத்துவதற்கு கலைஞரைத் தவிர, இன்னொருவர் இன்னும் இந்த நாட்டில் பிறக்கவில்லை.

காரணம் தமிழன் எவனிடமும் ஏமாறாமல் இருக்க அவனைத் தொடர்ந்து தயார் செய்து கொண்டிருக்க வேண்டும். தலைவர் கலைஞர் அதை தினமும் செய்து கொண்டிருக்கிறார். தினமும் எழுதுகிறார். அறிக்கை விடுகிறார். கலைஞரால் ஒருநாள் கூட எழுதாமல் இருக்க முடியாது. அதே போன்று பெரியார் அவர்களாலும் மேடையில் பேசாமல் ஒருநாளும் ஓய்வாக இருக்க முடியாது.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்த இயக்கம் இலட்சிய இயக்கம். இது வெறும் அரசியல் இயக்கமல்ல. தேர்தல் வரட்டும். கலைஞர் முதலமைச்சராகட்டும். அவர் விருப்பப்படி ஒரு இருபதுபேர் அமைச்சராகட்டும். தமிழ்நாடு சட்டசபை தூய்மையாகட்டும். தமிழ்நாடு வாழட்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கட்டும் என்று விரும்புகின்றவர்களில் நானும் ஒருவன்தான். இது மட்டுமே இலட்சியமல்ல.

கலைஞரை முதலமைச்சராகப் பார்த்தபோது ஏற்பட்ட மதிப்பைவிட இப்போது மதிப்பு அதிகமில்லையா? அதிகாரத்தாலா ஒருவரை மதிப்பது? பெரியார் என்ன முதலமைச்சராக இருந்தாரா?

பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

திரு.வி.க. முதலமைச்சராக இருந்தாரா? அதிகாரத்திற்கு வருவது என்பது நாட்டின் போக்கை மாற்றுவதற்காக. ஆனால் நம்முடைய இலட்சியம் தமிழனைத் தமிழனாக்குவது என்பது. அது சாதாரண விஷயமல்ல. தமிழனையே தமிழனாக்க முடியாதபோது, யார் முதலமைச்சராக இருந்தாலும், யாருக்கு என்ன தெரியப் போகிறது?

தமிழனுக்குள்ள மிகப் பெரிய பெருமை, தமிழன் தொடக்க காலத்திலிருந்து, இன உணர்வு இல்லாதவனாக இருக்கிறான் என்பது. எந்த மொழிகளுக்கும் இல்லாத சிறப்பு தமிழுக்கு இருக்கிறது. தமிழ்ச் சொற்களைப் போல் இயற்கையுடன் இயைந்து ஒலிக்கும் முறையில் வளர்ந்து பெயர் பெற்ற மொழி உலகத்தில் வேறு எந்த மொழியும் இல்லை. தமிழை முத்தமிழ் என்கிறோம். அது போல மூன்று தெலுங்கு உண்டா? மூன்று கன்னடம் உண்டா? மூன்று ஆங்கிலம் உண்டா? மூன்று பிரெஞ்சும் கிடையாது. ஆனால் தமிழுக்குத் தான் அந்தச் சிறப்பு உண்டு. பிரஞ்சில் இசை இருக்கலாம். இத்தாலி மொழியில் இசை இருக்கிறது. கிரேக்க மொழியில் இசை உண்டு. அரபு மொழியில் இசை உண்டு. ஆனால் மொழி மூலமே இசையாகவும், கூத்தாகவும் இருந்தது என்பது இயல், இசை, கூத்து என்ற பகுப்பால் பெறப்படும். கூத்தாகப் பிறந்து, இசையாக அரும்பி அதன்பின்னர் இயலாக வளர்ந்த இயற்கை வளர்ச்சித் திறனோடு ஒட்டியே வளர்ந்து, அதற்குப் பின்னர் முத்தமிழ் என்று அறியப்பட்ட மொழி தமிழ் மொழி.

அப்படிப்பட்ட மொழி நமக்குச் சொந்தம். ஆனாலும் நம்முடைய எண்ணத்திலே தாய் மொழியைத் தாழ்வாகத்தான் கருதுகிறோம். ஒருவேளை நாமெல்லாம் ஊமையாக இருந்

தால் தமிழின் அருமை தெரியுமோ, என்னவோ? தமிழன் தனது ஈடு இணையற்ற தாய்மொழியாம் தமிழினை மதிப்ப தில்லை; பெற்ற தாய்தனை மதிக்க அறியா மகன்போல.

தி.மு.க.வின் தோல்வி தமிழினத்தின் தோல்வி!

அந்த அளவுக்குத் தமிழன் தன்னை உணராதவனாக ஆனதற்குத் காரணம், தமிழனுக்கு ஒரு பரந்த நோக்கம், நல்ல எண்ணம். அதனுடைய விளைவு தமிழன் ஏமாந்தான். தமிழன் தன்னை மறந்தான். தரணியெல்லாம் ஆண்ட தமிழ் இனம் மெல்லத் தன் செல்வாக்கை இழந்தது. இழந்துவிட்ட காரணத்தால், தமிழர்களை மறுபடியும் உருவாக்க வேண்டிய தொரு நிலை ஏற்பட்டுத்தான் பெரியாரும், அறிஞர் அண்ணாவும், பாவேந்தரும் அதற்காகப் பாடுபட்டு அவர்கள் காட்டிய வழியில் தி.மு.கழகம் தொடர்ந்து இந்த நாட்டு மக்களிடம் அந்த இலட்சியத்தை எடுத்து வைத்து, தமிழ் நாட்டைப் புதுப்பித்துக் கொண்டு வருகிறது. அதனால் இடையிடையே சில பல சருக்கல்கள் ஏற்பட்டன.

கலைஞர் தோற்றார் என்றால் அது அவருடைய தோல்வி அல்ல; தமிழினத்தினுடைய தோல்வி. தி.மு.கழகம் கடந்த தேர்தலில் தோற்றது என்று சொன்னால், அது தி.மு.கழகத்தின் தோல்வி அல்ல. தமிழினத்தினுடைய தோல்வி; தமிழினத்தினுடைய தகுதியற்ற தன்மை. தமிழினத்தினுடைய தெளிவற்ற, துணிவற்ற, ஆற்றலற்ற தன்மை. அதுதான் காரணம்.

கலைஞரைப் போல் சாதனை படைத்த முதலமைச்சர் உண்டோ?

கலைஞர் தமிழ்நாட்டில் ஆட்சி நடத்தியபோது, ஏதோ தமிழர்களுக்கெல்லாம் பாதுகாப்பு இல்லாத அளவு விடுதலைப் புலிகளுக்கெல்லாம் நாம் வரவேற்பு கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்ற ஒரு தவறான எண்ணத்தை உருவாக்கி, அந்த எண்ணத்தையே அடிப்படையாகப் பிடித்துக் கொண்டு, கலைஞரைப் பதவியிலிருந்து இறக்க வேண்டும் என்றார்கள். ஆனாலும் விடுதலைப் போராளிகளைக் கலைஞர் எவ்வளவு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார் என்பது அனைவருக்கும் தெரியும். கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது ராஜீவ் காந்தி பிரதரமாக எத்தனை முறை வந்தார்; பிரதமராக இல்லாமல் எத்தனை முறை வந்தார்? அவர் பத்திரமாகத் திருப்பி அனுப்பப்பட்டார் என்பது அனைவருக்கும் தெரியும்.

இருந்தும் தமிழ்நாட்டில் கலைஞர் முதலமைச்சராக இருக்கக்கூடாது; அவரை இறக்கிவிட்டால்தான் நம்மவாள் ஆட்சி வரும் என்று திட்டமிட்டு விரும்பி இன்றைய முதலமைச்சர் கோரினார். எனவே அதே உணர்வுடன் அதற்கு ஒத்துழைத்தவர் ராஜீவ் காந்தி. இவர்கள் இரண்டு பேரும் சொன்னதால் அதை ஏற்றுக் கொண்டவர் குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன். ராஜீவ் காந்தியின் பிடியிலே சிக்கியிருந்த பிரதமர் சந்திரசேகரும் சேர்ந்து கழக ஆட்சியைக் கலைத்தார்கள்.

தமிழ்நாட்டை ஆண்ட முதலமைச்சர்களில் கலைஞரைப் போல திறமையானதொரு முதலமைச்சரைத் தமிழ்நாட்டில் காட்ட முடியுமா?

இராஜகோபாலாச்சாரியார் முதலமைச்சராக இருந்தபோது கிருஷ்ணய்யரை எழுபது வயதில் சட்டமன்றத்தின் செயலாள ராக ஆக்கினாரே, அதை நாம் பார்க்கவில்லையா?

ஓ.பி.ராமசாமி ரெட்டியார் முதலமைச்சராக இருந்தபோது, அவர் மீது குற்றம் சொல்லி ஒழித்தார்களே, என்ன காரணம்? குமாரசாமி ராஜா முதலமைச்சராக இருந்தாரே, ஏன் அவர் தூக்கி எறியப்பட்டார்? அதற்குப் பின்னர் காமராசர் முதல மைச்சராக இருந்தபோது, அவர் ஆட்சியில் ஊழல் நடைபெறு கிறது என்று இராஜாஜி குற்றம் சாட்டவில்லையா? காமராச ருக்குப் பின்னர் பெரியவர் பக்தவத்சலம் ஆட்சி நடத்தினாரே, நிர்வாகத்தில் எவ்வளவுதான் திறமைமிக்கவராக இருந்தாலும், தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு அவரால் என்ன சாதிக்க முடிந்தது?

ஜெயலிலதாவைப் பத்திரிகைகள் தாங்கிப் பிடிப்பது ஏன்?

அறிஞர் அண்ணா இரண்டாண்டுகள்தான் முதல்வராக இருந்தார். அதிலும் ஆறுமாத காலம் உடல் நலிவுற்று சிகிச்சை பெற்று வந்தார். அதற்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்ற கலைஞர் சாதித்த சாதனைகளை, வேறு யார் சாதித்தார்கள்?

இன்றைக்கு நான் தமிழ்நாட்டு பத்திரிகையாளர்களையெல் லாம் கேட்கிறேன். கலைஞரின் சாதனையையும், ஜெயலலிதா வின் சாதனையையும் உங்களுக்கு தைரியம் இருக்குமானால், ஒப்பிட்டு, மதிப்பீடு செய்து எழுதுங்கள்.

ஜெயலலிதாவை இன்றைக்கு உள்ள பத்திரிகைகள் தாங்கிப் பிடிப்பதற்குக் காரணம் என்ன? ஒரு ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னால் வைதிக உணர்வால் ஏற்பட்ட மேல்சாதி எண்ணம் தடித்துப் போனதுதான் அல்லவோ? இந்த நாட்டை ஆள்வதற்கு ஒரே ஒரு ஜாதிக்குத்தான் தகுதி இருக்கிறது என்று சொன்னால், இந்த நாடே எரிந்து சாம்பலா கட்டும்.

தமிழ்நாட்டைக் கலைஞர் ஆள வேண்டுமா, இல்லையா என்பது பிரச்சினை அல்ல. கலைஞர் சூத்திரன் என்பதால், அவர் ஆட்சி நடத்தக் கூடாது என்பதற்கு இந்த நாட்டில் திட்டமிட்டு எவ்வளவோ சதி நடைபெற்றது. அதன் தீயவி ளைவுதான், இன்றைக்கு அயோத்தியிலே கரசேவை செய்வ தற்கு ஆதரவு தருவதற்குத் தமிழக முதல்வரின் கரம் நீண்ட காரணத்தால் நாடெங்கும் தொடர்ந்து நடைபெற்ற கொடுமை கள்.

அயோத்தியில் கரசேவைக்கு நீண்ட கரந்தானே - இந்தப் பந்தல்வரை நீண்டு, தீக்கு இரையாக்கப்பட்டது. நாட்டின் அமைதி காக்கப் பாடுபட்ட காந்தி அடிகளின் உயிருக்கே உலைவைத்த கூட்டத்தினர் - நாதுராம் கோட்ஸேயின், வழிவந்தவர்கள்தானே 'கரசேவை' கூட்டத்தார். 'இந்தியாவை - இந்து அரசாக ஆக்கத் திட்டமிடுபவர்களின் கரசேவை அல்லவா அது? இந்துவாகவே இருக்கிறோம் என்பதற்காக, எப்படிப்பட்ட இந்துவாக இருக்க நமது தமிழ் மக்கள் இணங்க முடியும்? காந்தியடிகள், இராஜாஜி, காமராசர் போன்ற இந்துவாகவா? நாதுராம் கோட்சே போன்று காந்தியாரையே கொலை செய்யத் துணிந்த இந்துவாகவா?

பகுத்தறிவுக் கொள்கைஎ்ய ஏற்காவிடினும், இந்து என்று நாளெல்லாம் ஒப்புக்கொண்டு வாழ்ந்தவரையே கொன்றொழித்து விடத் துணியும் இந்துவைத் - தமிழ்நாட்டு மக்கள் ஏற்க முடியுமா? ஏற்கலாமா?

வைதிக உணர்வு வளர்க்கவே ஜெயலலிதாவின் 'கரசேவை'!

ஏன் இந்தக் கொடிய நிலை? எப்படிக் கரசேவைக்குக் கைகொடுத்தார் தமிழக முதல்வர்? இது வெறும் அரசியல் என்று கருதுகிறீர்களா? வைதிக உணர்வு உள்ளூர ஓடிக் கொண்டிருக்கிற காரணத்தால், அந்த உணர்வை இந்தச் சந்தர்ப்பத்தில் தூக்கி நிறுத்த வேண்டும் என்றுதான் அந்த நிலையை எடுத்தார்கள். அவரே சட்ட மன்றத்தில், நான் ஒரு பாப்பாத்தி என்று ஆணவத்தோடு சொல்லவில்லையா? தான் ஒரு பாப்பாத்தி என்ற அந்த தாரகமந்திரத்தை அவர் மறக்கவில்லை. ஆனாலும் திராவிடப் பாரம்பரியம் என்னும் திரை போட்டுக் கொண்டுதான் வைதிகம் கோலோச்சுகிறது.

நாவலர் நெடுஞ்செழியன் தன்னை மறந்திருக்கலாம். அமைச்சர்கள் முத்துசாமி செங்கோட்டையன் மறந்திருக்கலாம். ஏனென்றால் இவர்களுக்குத் தமிழர்கள் என்னும் சொரணையே இருப்பதாக நான் கருதவில்லை. அதனால்தான் தமிழ்நாட்டில் வேத ஆகமக் கல்லூரி தொடங்கப்படும் என்கிறார்கள்.

எனவேதான் நான் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொள்கிறேன். நாம் எல்லோரும் தமிழர் என்ற உணர்வுவை என்றைக்

குப் பெறுகின்றோமோ, அன்றைக்குத்தான் தமிழன் உருப்படு வான். தமிழர்கள் தலைநிமிரும் வழிபிறக்கும்; தமிழ்நாடு வாழும் என்பதை மறவாது நமது பணியை நாம் தொடர வேண்டும்.

தொடரட்டும் நமது பணி!
பரவட்டும் நமது கொள்கை!
முடங்கட்டும் வைதிகம்!
நிமிரட்டும் தமிழினம்!

தி.மு.க. அறக்கட்டளை - அறிவாலயம் - சென்னை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18